1970 ஜனவரி 27

States were able to get substantial sums, why has this Government (which got so many crores from Centre for drought relief) failed in this?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விளக்கம் கேட்பதாக இருக்கவேண்டுமே தவிர, மறுபடியும் நீங்கள் ஒரு குற்றம் சொல்கிறீர்கள். விவாதம் முடிவுற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு திரு. விநாயகம் அவர்களிடத்திலேயிருந்து, இந்த அரசாங்கத்திற்குத் திறமை இருக்கிறதா, திறமை இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவ்வளவு திறமைக் குறைவாக தமிழ் மக்கள் யாரும் இல்லை.

பிற்பகல் 1-00

(7) 1969-70-ம் ஆண்டில் கூடுதல் செலவுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு கோரிக்கையாக எடுத்துக்கொண்டு வாக்கெடுப்பு கோராமல், நான் எல்லாக் கோரிக்கைகளையும் படித்து விட்டு, கடைசியில் ஒரே முறையாக எல்லாக் கோரிக்கைகளையும் சேர்த்து வாக்கெடுப்புக்கு விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

கோரிக்கை எண். (1)		கோரிக்கை. (2)	கோரிய தொகை. (3) ரூ.
கோரிக்கை	1	நிலவரித்துறை.	25,36,800
ஷ்டி	2	மோட்டார் வண்டிகள் சட்டம்—நிர்வாகம்.	100
ஷ்டி	3	பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.	1,12,700
ஷ்டி	5	பத்திரப் பதிவுத் துறை.	300
ஷ்டி	6	மாநில சட்டமன்றப் பேரவை.	100
ஷ்டி	8	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.	16,93,400
ஷ்டி	8-	பால் வழங்கு திட்டங்கள்.	-100
ஷ்டி	9	மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.	2,23,100

1970 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

கோரிக்கை எண். (1)		கோரிக்கை. (2)	கோரிய தொகை. (3)
			ரூ.
கோரிக்கை	12	காவல்துறை.	600
ஷை	13	கல்வி.	400
ஷை	14	மருத்துவம்.	31,01,000
ஷை	15	பொதுச் சுகாதாரம்.	31,98,000
ஷை	16	வேளாண்மை.	2,14,100
ஷை	19	கூட்டுறவு.	30,04,800
ஷை	20	தொழில்கள்.	1,43,106
ஷை	21	சின்கோனா.	1,58,100
ஷை	23	சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.	12,86,600
ஷை	25	பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன்.	100
ஷை	26	பாசனம்.	49,00,000
ஷை	27	பொதுப்பணிகள்—பணிகள்.	50,23,100
ஷை	28	பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.	1,36,100
ஷை	29	பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.	20,14,000
ஷை	30	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்	30,00,300
ஷை	31	பஞ்சத் துயர் தணிப்பு.	100
ஷை	33	பல்வகை.	53,49,500
ஷை	34	எழுதுபொருள்-அச்சுத்துறை.	100
ஷை	35	வனத்துறை.	62,400
ஷை	36	ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒப்படைகளும்.	14,10,000
ஷை	40	தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.	1,400
ஷை	41	பாசன மூலதனச் செலவு.	71,00,700
ஷை	42	பொதுப் பணிகள் மூலதனச் செலவு.	9,52,200
ஷை	44	காட்டு வள மூலதனச் செலவு.	4,05,100
ஷை	46	அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.	200
ஷை	47	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.	1,100

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [1970 ஜனவரி 27

மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

8. அறிவிப்பு

தமிழ்நாடு, 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுப்பதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. அரசினர் மசோதாக்கள்

தமிழ்நாடு, 1970 ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—"That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation Bill, 1970".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பி. ப. 1–04 இத்துடன் பேரவையினுடைய இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

(10) பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள் ஏதுமில்லை.

இணைப்பு—I

[461-ம் பக்கத்திலுள்ள 79-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

(அ) மானியம் பெறும் தனியார் பள்ளிகளுக்கு மட்டுமே பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று சம்பளங்கள் கொடுக்க வகை செய்யும்பொருட்டு பணியாளர் மானியம் (staff grant) போதுமான அளவு முன்னதாகவே வழங்கப்படுகிறது. நகராட்சி தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்குச் சம்பளம் நகராட்சி நிதியிலிருந்தே